செய்தி வெளியீடு எண் : 1832 நாள் : 19.10.2022

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில் கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் இம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் இன்று (19.10.2022) நடைபெற்றது.

-----

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில் கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் இம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் இன்று (19.10.2022) சென்னை மாநில செய்தி நிலையக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தமது தலைமையுரையில், "ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் சிலை மற்றும் அரங்கம் அமைப்பது தொடர்பாக இடம் தேர்வு மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் அனுமதியினை விரைந்து பெற்று இடங்களைப் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள நினைவகங்கள், மணிமண்டபங்கள், அரங்கங்கள், நினைவுச்சின்னங்கள் மற்றும் சிலைகள் ஆகியவற்றை முறையாக பராமரிக்க வேண்டும், நினைவகங்கள், மணிமண்டபங்கள், அரங்கங்கள் தொடர்பாக அமைக்கப்படும் வழிகாட்டிப் பலகைகள் சிறிய அளவில் இல்லாமல் அவற்றின் புகைப்படங்களுடன் பொதுமக்களின் பார்வையில்படும் வகையில் பெரிய அளவில் அமைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், தமிழரசு இதழை அதிக அளவில் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். தமிழரசு இதழ், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிகழ்ச்சிகள், அரசின் திட்டங்கள், சாதனைகள், அரசாணைகள் அனைத்தையும் கொண்டு உண்மைச் செய்திகளை உள்ளடக்கியுள்ளதால் எதிர்மறையான செய்திகள் பரவும்போது தமிழரசு இதழை படிப்பதால் பொதுமக்கள் அச்செய்திகளைப் பற்றிய உண்மைத் தன்மையினை அறிய நல்ல ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, பொதுமக்கள், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பத்திரிகையாளர்கள் போன்றோர்களிடம் தமிழரசு இதழ் மூலம் உண்மைச் செய்திகளை கொண்டு சேர்க்க வேண்டும். தமிழரசு சந்தாதாரர்களைச் சேர்க்கும்போது மிகுந்த ஈடுபாட்டுடனும், ஆர்வத்துடனும் சேர்க்க வேண்டும். மாவட்டங்களில் உள்ள ஒப்பந்ததாரர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், வர்த்தகர்கள் ஆகியோர்களை அணுகி, நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு லட்சம் தமிழரசு சந்தாதாரர்களைச் சேர்க்க வேண்டும் என்ற இலக்கை அடைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

மேலும், பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெற்று மறைந்த பத்திரிகையாளரின் துணைவியாருக்கு வழங்கப்படும் பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியத்தினை அரசின் உரிய விதிமுறைகளைப் பின்பற்றி, காலதாமதமின்றி விரைந்து வழங்கிட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்".

முன்னதாக, இக்கூட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார். இக்கூட்டத்தில் திரு. சிவ.சு. சரவணன், கூடுதல் இயக்குநர் (செய்தி), திரு. மு.பா. அன்புச்சோழன், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு), இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in